ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | பிப்ரவரி 1998 | கானம் : 7

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளீ

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 பிப்ரவரி 1998 கானம் : 7

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 27 | 4 |
| 3. | மஹா பாரதக் கதைகள் - 2 | 6 |
| 4. | நக்ஷத்திரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 8 | 12 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 14 |
| 6. | வேத கதைகள் - 9 | 16 |
| 7. | நாரத பக்தி ஸூத்ரம் - 1 | 20 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 4 | 24 |
| 9. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 30 | 26 |
| 10. | நகர ஸங்கீர்த்தனம் | 29 |
| 11. | செய்திகள் | 32 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



அத்யயன உத்ஸவத்தன்று தாயார், பெருமாளுடன்
அத்யயன உத்ஸவ மணி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சி.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : தர்பார் தாளம் : ஆதி

பல்லவி

*ஸர்வ ஸுலப ப்ரேமிகவரத*
*ஸர்வ ஶரண்ய ப்ரேமிகவரத* *(ஸர்வ)*

சரணங்கள்

*அமரஜன ஸேவித ப்ரேமிகவரத*
*அமித பராக்ரம ப்ரேமிகவரத*
*அனாதி ரூபா ப்ரேமிகவரத*
*அத்புத சாரித்ர ப்ரேமிகவரத* *(ஸர்வ)*

*நூதன வஸ்த்ரதர ப்ரேமிகவரத*
*நூபுரதர ப்ரேமிகவரத*
*நவநீத பக்ஷக ப்ரேமிகவரத*
*நந்தகுமார ப்ரேமிகவரத* *(ஸர்வ)*

*பாகவதப்ரிய ப்ரேமிகவரத*
*ஶாஸ்வதஸ்ரீ ப்ரேமிகவரத*
*ஸங்கேத பாஷக ப்ரேமிகவரத*
*பங்கஜ லோசன ப்ரேமிகவரத* *(ஸர்வ)*

*முக்த பாலக ப்ரேமிகவரத*
*முக்தி தாயக ப்ரேமிகவரத*
*மங்கள ரூபா ப்ரேமிகவரத*
*முரளிதர ப்ரேமிகவரத* *(ஸர்வ)*

## 27

ஒரு சில இதழ்களுக்கு முன்பு, நம் ஸ்வாமிகள், சீர்காழியை சுற்றியுள்ள திவ்ய தேசங்களுக்குச் சென்று வந்ததையும், அந்த ஆலயங்களில் இன்றைய ஸ்திதியைப் பற்றியும் எழுதியிருந்தேன். இன்று, இது போல் பல கிராமபுர ஆலயங்கள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன. மேற்படி ஆலயங்கள், தீபம் ஏற்றவும், ஒரு வேளை நிவேத்யத்துக்கும் கூட வழி இல்லாமல் இருக்கின்றன. இதை கருத்தில் கொண்டு நம் ஸ்வாமிகள், ஹரி பக்த ஜன சபா என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, கவனிப்பாரற்று இருக்கும் ஒரு சில கோவில்களுக்காவது தீபம் ஏற்றுவதற்கும், ஒரு வேளை நிவேத்யத்திற்கும், நந்தவனம் அமைத்து கொடுப்பதற்கும், ஏற்பாடுகள் செய்ய வழி வகுத்து வருகின்றார்.

தற்சமயம், இதன் மூலம் நாங்கூரில் உள்ள இரண்டு திவ்ய தேசங்களுக்கு ஒரு வேளை நிவேத்யத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இரண்டு ஆலயங்களுக்கு நந்தவனம் அமைத்து கொடுக்கப் பட்டுள்ளது. இரண்டு ஆலயங்களுக்கு பெரிய மணியும் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. இது மட்டுமில்லாமல் உழவாரப்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

நாங்கூரில் உள்ள திவ்ய தேச கோவில்களில் ப்ரதானமான கோவிலான குடமாடும் கூத்தர் கோவிலுக்கு சில பக்தர்களைக் கொண்டு முழு திருப்பணியும் செய்து ஸம்ப்ரோக்ஷணம் செய்வதற்கு ஸ்வாமிகள் உத்தேசித்துள்ளார். முதல் கட்டமாக, கருட மண்டபமும், பலி பீடமும் திருப்பணி செய்யப்பட உள்ளன. பிறகு ராஜ கோபுரமும் திருப்பணி செய்யப்பட உள்ளது. இது மட்டுமில்லாமல் நம்முடைய மதுரபுரி ஆஸ்ரமம் அமைந்துள்ள மாஹாண்யம் என்ற கிராமத்தில் உள்ள ப்ராசீனமான ஸ்ரீராமர் கோவிலிலும் திருப்பணி வேலைகள் நம் ஸ்வாமிகளால் ஆரம்பிக்க வைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

சென்னை ப்ரேமிக பவனத்தில் மார்கழி மாதம் முப்பது நாளும் தினமும் காலையில் 5 மணிக்கு தனுர் மாத பூஜை நடைபெற்றது. பிறகு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்டமாக 'ஹரே ராம' நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ஜனவரி மாதம் 1-ந் தேதி வழக்கமாக நடத்தி வரும் ராதா கல்யாணத்தை, இவ்வருடம், ஸோமயாஜி ஸ்ரீ மல்லிகார்ஜுன சர்மா க்ருஹத்தில் ப்ரேமிக வரதனை எழுந்தருளச் செய்து, நம் ஸ்வாமிகள் நடத்தி வைத்தார். ஜனவரி மாதம் 5-ந் தேதி முதல் ப்ரேமிக வரதனை, ப்ரேமிக பவனத்தில் உள்ள அத்யயன உத்ஸவ மண்டபத்தில் மாலையில் எழுந்தருளச் செய்து ஸ்ரீமான் ராகவன் என்பவரை ப்ரதானமாகக் கொண்டு, ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் ஸேவிக்கப்பட்டன. பூர்த்தி நாள் அன்று, வேத சாத்துமறையும் பகவானுக்கு கண்டருளப்பட்டது.

ஜனவரி மாதம் 8-ந் தேதி வைகுண்ட ஏகாதசி. அன்று காலையில், 4 மணிக்கு பரமபத வாசல் திறக்கப்பட்டு ப்ரேமிக வரதன் கருடாழ்வார் மீது எழுந்தருளப்பட்டு, புறப்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷமாக திருமஞ்சனம் செய்யப்பட்டது. அன்று முழுவதும் ப்ரேமிக பவனத்தில் வேத பாராயணம் நடைபெற்றது. இரவு தி.நகர், சிங்கார வேலன் தெருவில் அமைந்துள்ள புவனேஸ்வரி கல்யாண மண்டபத்தில் திவ்ய நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. இந்த ஸங்கீர்த்தனத்தில், ஸ்ரீமான்கள் சௌந்தரராஜ பாகவதர், பொழிச்சலூர் ரமணி பாகவதர், ஜானகிராம பாகவதர், கல்யாணம் பாகவதர், ரமணன் பாகவதர் மற்றும் அநேக பாகவதப் பெரியோர்கள் கலந்து கொண்டனர்.

தனுர் மாதம் முழுவதும் காலை முதல் இரவு வரை பகவத் விஷயமாகவே இருந்து வந்தது மனதிற்கு மிகவும் ஆனந்தத்தை அளித்தது.

(தொடரும்)
- ஜயந்தி ஜானகிராமன்

பின் அட்டைப்படம் : சென்னை ப்ரேமிக பவனத்தில் வைகுண்ட ஏகாதஸீ அன்று பெருமாள் தாயாருடன், ஸ்ரீ ஸ்வாமிகள்.

Photos in this Issue by : Sri Bagyanathan

# மஹா பாரதக் கதைகள் - 2

வடக்கில், மத்திய தேசத்தில் உண்டானவனும், கறுத்த சரீரமுள்ளவனும், வேதம் ஓதாதவனும் ஆன கௌதமன் என்னும் ப்ராஹ்மணன், பொருளில் பேராசையால் திருட்டு கூட்டம் நிரம்பிய ஒரு க்ராமத்திற்குச் சென்றான். அந்த க்ராமத்தில், எல்லா ஜாதிகளின் வழக்கத்தை அறிந்தவனும், ப்ராஹ்மணர்களுக்கு தானம் செய்வதில் விருப்பமுள்ளவனும் ப்ராஹ்மணர்களுக்கு ஹிதமானவனுமான ஒரு திருடன் இருந்தான். கௌதமன் அந்த திருடனுடைய வீட்டில் பிக்ஷை யாசித்தான். அந்த திருடன், ப்ராஹ்மணனுக்கு தங்குவதற்கு இடமும், ஒரு வருடத்திற்கான பிக்ஷையையும், ஒரு கன்யா ஸ்த்ரீயையும் அளித்தான். கௌதம கோத்ரத்தில் பிறந்தவனான அந்த ப்ராஹ்மணன், மிகவும் சந்தோஷத்துடன் அந்த க்ருஹத்தில் வசித்து திருடனுடைய குடும்பத்திற்கு வேண்டிய ஸஹாயத்தையும் செய்து கொண்டு வந்தான். ஒரு வருடம் அந்த க்ராமத்தில் வசித்துக் கொண்டு திருடர்களின் சேர்க்கையால் அவனும் அம்பெய்வதில் நாட்டமுடையவனாகி ஒவ்வொரு நாளும் காடுகளில் இருப்பவைகளான அன்ன பக்ஷிகளைக் கொன்றான். ஹிம்ஸிப்பதில் ஸாமர்த்யமுள்ளவனாகவும் தயையற்றவனாகவும் திருடர்களுக்குச் சரியான தன்மையை அடைந்தான்.

ஒரு ஸமயம், ஜடை, மரவுரி தரித்தவரும், வேதாத்யயனத்தில் விடாமுயற்சியுள்ளவரும், பரிசுத்தருமான வேறு ஒரு ப்ராஹ்மணர், அந்த க்ராமத்திற்கு வந்தார். ஆசாரம் இல்லாதவர்களுடைய அன்னத்தை விலக்கியவரான அந்த ப்ராஹ்மணர், அந்த க்ராமத்தில் ஒரு ப்ராஹ்மணனுடைய வீட்டைத் தேடி அலைந்தார். பிறகு கௌதமனுடைய வீட்டை அடைந்தார். கௌதமனும் வந்தான். தோளில் வில்லும் அம்புறாத் தோணியுமாக நின்ற கௌதமன், ரத்தக் கறைகளுடன் ராக்ஷஸன் போல் சோபையற்று இருப்பதைப் பார்த்து, சண்டாளனுக்கும் கீழாக அவனை எண்ணி அவனிடம் கூறினார். ''நீ நற்குலத்தில் பிறந்த ப்ராஹ்மணனன்றோ? நீ எப்படி திருடர்களின் நிலையை அடைந்தாய்? ப்ராஹ்மணர்களும், வேதத்தில் கரை கண்டவர்களும், பிரசித்தி பெற்றவர்களுமான உன் முன்னோர்களை நினைத்துப் பார். அந்த பெரியோர்களின் குலத்தில் பிறந்த நீ, இவ்விதம் குலத்தின் பெயரைக் கெடுக்கிறாயே என்று கூறினார்.

மேலும், ''ஹே ப்ராஹ்மணா! நீ உன்னைப் புத்தியால் தெரிந்து கொண்டு ஸத்வ குணத்தையும் ஸ்வபாவத்தையும் வேதத்தையும் அடக்கத்தையும் தயையையும் நன்றாக அலசி இவ்விடத்திலிருந்து விலகிக்கொள்'' என்று சொன்னார். அந்த கௌதமன் என்னும் ப்ராஹ்மணனும், வருத்தமுள்ளவன் போல் பெருமூச்சுவிட்டு, ''ப்ராஹ்மண ஸ்ரேஷ்டரே! நான் பொருளில்லாதவன். வேதமறிந்தவனுமல்லன். பொருளில் ஆசையால் இவ்விடத்தில் சேர்ந்தவனென்று அறிந்து கொள்ளும். தங்களைப் பார்த்ததால் க்ருதார்த்தனாயுள்ளேன். இன்று இரவு இங்கு வஸியும். நாளை இருவரும் சேர்ந்து செல்வோம்'' என்று கூறினான். அந்த ப்ராஹ்மணர் வெட்கமுற்றவராக, ஒன்றையும் தொடாமல் அவ்விடத்தில் வஸித்தார். பசியுள்ள அவர், உபசரிக்கப்பட்டவரானாலும் போஜனம் செய்ய விரும்பவில்லை.

இரவு முடிந்து, பொழுது விடிந்ததும், அந்த ப்ராஹ்மணர் சென்றவுடன், கௌதமன் தன் விருப்பம் போல் வெளியில் கிளம்பி ஸஞ்சரிக்கத் தொடங்கினான். அவன், வழியில் ஒரு வணிகர்களின் கூட்டத்தைக் கண்டு, அவர்களுடன் கூட கலந்து கொண்டு, ஸமுத்ரத்தை நோக்கி ப்ரயாணஞ் செய்யத் தொடங்கினான். அந்த வர்த்தகக் கூட்டம் ஒரு மலையின் குகையில் தங்கும் பொழுது மதம் பிடித்த யானையால் தாக்கப்பட்டது. கூட்டத்திலுள்ள பெரும்பாலான வணிகர்கள் கொல்லப்பட்டனர். கௌதமன் மிகவும் பயந்தவனாகி மிக்க ப்ரயாஸத்தால் தப்பி, வட திசையை நோக்கி ஓடினான். பிறகு வீட்டிலிருந்தும், கூட்டத்திலிருந்தும் பிரிந்தவனான அந்த ப்ராஹ்மணன் யாருடைய ஸஹாயமும் கிடைக்காமல் காட்டில் சுற்றிக்கொண்டிருந்தான். பிறகு அவன், பூத்த மரங்களுள்ளதும் எல்லா காலங்களிலும் பூக்கக்கூடிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டதும், நந்தவனத்தை போன்றதும் யக்ஷர்களாலும் கின்னரர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதும், ஸாலம்பனை, வெள்வேல், அரசு, ஆல் முதலிய மரங்களால் சூழப்பட்டதும், சிறந்த சந்தன மரங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான ஒரு பெரிய அரண்யத்தை அடைந்தான்.

அந்த ப்ராஹ்மணன், அந்த அரண்யத்தில், பக்ஷிகளின் வித விதமான சப்தத்தை கேட்டுக் கொண்டே சென்றான். அந்த பகுதியில், ஐஸ்வர்யத்துடன் கூடியதும் மிகப் பெரியதுமான ஒரு ஆலமரத்தைக் கண்டு வியந்த கௌதமன், குடை போன்றதும் உத்தமமான சந்தன ஜலத்தால் நனைக்கப்பட்டதும், ப்ரஹ்ம தேவரின் ஸபைக்கு ஒத்ததான ஸோபையை உடையதுமான அந்த மரத்தின் அடியில் சந்தோஷத்துடன் உட்கார்ந்தான்.

புஷ்பங்களுள்ள மரங்களால் சூழப்பெற்ற அந்த ஆலமரத்தை அடைந்தபொழுது ஸுகந்தமான மென்மையான காற்று கௌதமனுடைய ஶ்ரமத்தை போக்குவதுபோல் மென்மையாக தடவிச்சென்றது. மிகவும் ஶ்ரமப்பட்டிருந்த ப்ராஹ்மணன், சுபமான காற்று வீசியவுடன் ஸுகமடைந்து உறக்கமுற்றான். ஸூர்யனும் அஸ்தமயத்தை அடைந்தான்.

அப்பொழுது, கஶ்யபரின் பிள்ளையும், கொக்குகளுக்கு அரசனும், ப்ரஹ்ம தேவரின் தோழமையைப் பெற்றதுமான நாடிஜங்கனென்று ப்ரஸித்தி பெற்ற உத்தமமான பக்ஷி தன்னுடைய இருப்பிடமான அவ்விடத்திற்கு வந்தது. சூர்யனைப் போல் ஜொலிப்பதும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும் தேவ குமாரனுமான அந்த பக்ஷியைக் கண்டு கௌதமன் ஆச்சர்யமடைந்தான். பசியும் தாகமும் சூழ்ந்த புத்தியுள்ள கௌதமன், அந்த பக்ஷியைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தான்.

ராஜதர்மா என்னும் அந்த பக்ஷியானது, "ஓ! ப்ராஹ்மண! உமக்கு நல்வரவு! என்னுடைய பாக்யத்தால் என் வீட்டை அடைந்தவரா யிருக்கிறீர். என்னுடைய வீட்டை அடைந்த நீர், எனக்கு ப்ரியமான அதிதியாவீர். நீர் விதிப்படி என்னால் பூஜிக்கப்பட்டு, காலையில் ப்ரயாணம் செய்யலாம்" என்று கூறியது. கௌதமன் குதூஹலத்துடன் பக்ஷியைப் பார்த்தான். அந்த பக்ஷியானது மேலும், "ஐயா! நான் காஶ்யபருடைய புத்ரன். பதிவ்ரதையான தாக்ஷாயினீ என்னுடைய தாய்" என்று தன்னைப் பற்றி கூறியது. பிறகு, அந்த ராஜதர்மா, கௌதமனுக்கு புஷ்பங்களினாலான ஆசனத்தை அளித்து விதிப்படி பூஜித்தது. கங்கா ஜலத்தில் பெரிய மீன்களையும் அக்னியையும் கொடுத்தது. பிறகு ஶ்ரம பரிகாரம் செய்து கொள்ளும் அவனுக்கு தன்னுடைய சிறகுகளால் வீசிற்று. அந்த சமயத்தில் அவனுடைய கோத்திரத்தையும் வந்த காரியத்தையும் வினவிற்று. அந்த ப்ராஹ்மணனும், "நான் கௌதம கோத்திரத்தில் பிறந்தவன். தனம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கடலை நோக்கிப் போய்கொண்டிருக்கிறேன். நான் மிகவும் ஏழை" என்றான்.

உடனே காஶ்யப புத்ரனான அந்த பக்ஷீ, "ஓ ப்ராஹ்மண ஶ்ரேஷ்ட! நீர் சோகத்தை அடையக்கூடியவரல்ல. த்ரவ்யங்களுடன் வீடு போய் சேரப் போகிறீர். பொருளை அடையத் தக்க நான்கு வழிகளில் மித்ரனால் வரும் செல்வம் உயர்ந்தது. நான் உமக்கு நண்பனாகிறேன். அவ்விதம் நண்பனான நான் எதனால் உமக்கு த்ரவ்யங்கள் சேருமோ அத்தகைய கார்யத்தைச் செய்கிறேன்" என்று சொல்லிற்று.

காலையில் எழுந்தவுடன், ஸூக ப்ரசனம் செய்தபின், ''ஓ ப்ராஹ்மணா! இவ்வழியே செல்லும். மூன்று யோஜனை தூரத்தில் ராக்ஷஸர்களுக்கு அதிபதியும், மஹானும் விரூபாக்ஷனென்று ப்ரஸித்தி பெற்றவனும் மஹா பலசாலியுமான என்னுடைய ஸ்நேஹிதன் இருக்கிறான். நீர் அவனை அடையும். அவன் வார்த்தையால் உமக்கு இஷ்டமான செல்வங்களை அளிப்பான். இதில் ஸந்தேஹமில்லை' என்று பக்ஷி கூறியது.

உடனே கிளம்பிய அந்த ப்ராஹ்மணன், வழியில் கனிகளை இஷ்டம் போல் புஜித்துக்கொண்டு வேகமாகச் சென்றான். பக்ஷி கூறிய அந்த நகரத்தையும் அடைந்தான். பக்ஷியின் வார்த்தையினால், முன்பே அவனது வரவையறிந்திருந்த, புத்திமானான ராக்ஷஸன் அவனை ப்ரிய அதிதியாக பாவித்து, கோட்டை வாயிலிலிருந்தே அவனை அழைத்து வரச் செய்தான். பிறகு, அவனுக்கு விதிப்படி ஆஸனமளித்து உத்தமமான ஜலத்தினால் அர்க்யம் கொடுத்து பூஜை செய்தபின், அவனுடைய கோத்ரத்தையும், ப்ரஹ்மசர்யத்தில் வேதாத்யயனம் செய்த குருவையும் வேத சாகைகளையும் வினவினான். கௌதமன், ''நான் மத்திய தேசத்தில் பிறந்தவன். வேடர்களுக்கு இருப்பிடமான சேரி என்னுடைய வாசஸ்தலம். இரண்டாவதாக மணந்து கொண்ட ப்ராஹ்மண அல்லாத ஸ்த்ரீ என்னுடைய மனைவி. உண்மையாக இதை உன்னிடஞ் சொல்லுகிறேன்'' என்றான்.

உடனே அந்த ராக்ஷஸன் யோசிக்கத் தொடங்கினான். ''இவனுக்கு தானம் செய்தால், புண்ணியம் எனக்கு எவ்வாறு உண்டாகும்? இவன் பிறப்பில் ப்ராஹ்மணன். மஹாத்மாவான அந்த ராஜதர்மாவென்னும் பக்ஷிக்கு நண்பன். அந்த பக்ஷியினால் அனுப்பப்பட்டுமிருக்கிறான். அந்த பக்ஷியோ எப்பொழுதும் என்னையடுத்தது. நான் அதற்கு ப்ரியத்தைச் செய்வேன். இப்பொழுது கார்த்திகை மாதத்திய பூர்ணிமை திதியில், என்னுடைய க்ருஹத்தில் உத்தமர்களான ஆயிரம் ப்ராஹ்மணர்கள் போஜனம் செய்யப் போகிறார்கள். அதில் இந்த ப்ராஹ்மணனும் போஜனம் செய்யட்டும். இந்தப் ப்ராஹ்மணன் பொருட்டு என்னுடைய தனத்தை கொடுக்கிறேன். புண்யமான அந்த நாள் இப்பொழுது வந்திருக்கிறது. இந்த ப்ராஹ்மணனும் வந்திருக்கிறான். தனமும் ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறது. இனியும் தயங்க வேண்டாம்'' என்று அந்த ப்ராஹ்மணனுக்கு தங்க இடமளித்தான்.

பிறகு, கார்த்திகை பௌர்ணமியன்று ஆயிரம் ப்ராஹ்மணர்களும் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களுடன் கௌதமனும் கலந்து கொண்டான். உத்தமமான முறையில் அவர்களுக்கு போஜனம் செய்வித்து பலவிதமான தங்க பாத்ரங்களையும் வைர வைடூர்யங்களையும் தானம் செய்து, ''ப்ராஹ்மணர்களே! இன்று ஒரு நாள், உங்களுக்கு எந்த ராக்ஷஸர்களிடத்திலிருந்தும் பயமில்லை. ஸந்தோஷமாக இஷ்டப்பட்ட இடத்திற்கு செல்லுங்கள்'' என்றான். கௌதமனும், சந்தோஷமாக செல்வங்களையெடுத்துக் கொண்டு ஆல மரத்தை வந்து அடைந்தான். அந்த பக்ஷியும், மறுபடியும் அவனுக்கு அடைக்கலமளித்தது. இரவில் அந்த ப்ராஹ்மணன் அங்கிருந்து தன் வீடு செல்லும் வழியில், தன்னுடைய உணவைப்பற்றி கவலைப்பட்டு, அந்த பக்ஷியை கொன்று வழியில் உணவிற்காக பத்திரப்படுத்திக் கொண்டு வேகமாகச் சென்றான்.

விரூபாக்ஷன் என்னும் அந்த ராக்ஷஸன், நித்யம் தன்னைப் பார்த்துவிட்டு போகும் அந்த ராஜதர்மா, இரண்டு நாளாக வரவில்லையே என்று கவலை கொண்டு, தன்னுடைய வீரர்களிடமும், தன்னுடைய புத்ரனிடமும், ''இன்றும் அந்த பக்ஷியைக் காணேன். எனக்கு அந்த ப்ராஹ்மணன் மேல்தான் ஸந்தேஹம். அவன் கெட்ட நடத்தையுள்ளவன் என்பதை அவன் இங்கிருந்த இரண்டு நாட்களில் இங்கிதத்தால் அறிந்து கொண்டேன். அவன் இங்கிருந்து அங்குதான் சென்றுள்ளான். ஆகையால் ராஜதர்மா உயிருடன் உள்ளதா என்பதை அறிந்து வாருங்கள்'' என்று கூறி அனுப்பினான்.

இவ்விதம் ஏவப்பட்ட ராக்ஷஸ புத்ரன், அந்த ஆலமரத்திற்குச் சென்றான். அங்கு ராஜதர்மா இறந்திருப்பதைப் பார்த்து வருத்தப்பட்டு அழுதான். உடனே ராக்ஷஸர்கள் அனைவரும் கௌதமனைச் சென்று பிடித்தார்கள். பக்ஷியினது எலும்பும் எடுத்து வரப்பட்டது.

ராஜதர்மாவின் மரணம் விரூபாக்ஷனுக்கும் மற்றும் அந்நகரத்திலுள்ள அனைவருக்கும் துக்கத்தைக் கொடுத்தது. ராக்ஷஸர்கள் அனைவரும் கௌதமனை வதம் செய்து அவனது மாம்ஸத்தை புஜிக்க எண்ணம் கொண்டார்கள். ஆனால், விரூபாக்ஷன், 'இவன் நன்றி கெட்டவன். இவனுடைய மாம்ஸத்தை நாம் புஜிக்கக்கூடாது. வேலைக்காரர்களுக்கு போட்டு விடுவோம். என்றான். வேலைக்காரர் களும் அந்த நன்றி கெட்ட ப்ராஹ்மணனின் மாம்ஸத்தை புஜிக்க முன் வரவில்லை. பிறகு அவர்கள், அரசின் ஆணைப்படி கௌதமனைக் கண்ட துண்டமாக வெட்டி பிராணிகளுக்கு போட்டார்கள். மாம்ஸத்தை

புஜிப்பவைகளான பிராணிகளும் நன்றி கெட்டவனான அவனுடைய மாம்ஸத்தை புஜிக்கவில்லை.

ப்ராஹ்மணனுடைய செல்வத்தை திருடியவனுக்கும், ப்ரஹ்மஹத்தி செய்தவனுக்கும், குரு த்ரோஹம் செய்தவனுக்கும் ஸாதுக்களால் ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நன்றி மறந்தவனுக்கு ப்ராயஶ்சித்தமே இல்லை. மித்ர த்ரோஹம் செய்தவனும், நன்றி கெட்டவனும் க்ரூரனுமான அதமனுடைய மாம்ஸத்தை புழு பூச்சிகளும் தின்பதில்லை.

பிறகு, அந்த ராக்ஷஸன், அந்த ராஜதர்மாவிற்கு ஸம்ஸ்காரம் செய்வித்தான். கொக்குகளின் அரசனான அந்த கொக்கு, தேவனான இந்திரனால் அம்ருதத்தால் நனைக்கப்பட்டு திரும்பவும் உயிருள்ளதாக செய்யப்பட்டது. அந்த ப்ராஹ்மணனோ நரகத்தை அடைந்தான். ஆனால், உயிருடன் எழுந்த அந்த கொக்கு, ''எங்கே அந்த ப்ராஹ்மணன், அவனை விட வேண்டும்'' என்று இறைஞ்சியது.'' பிறகு மித்ர த்ரோஹம் செய்த அந்த ப்ராஹ்மணன் வேடுவ குலத்தில் பிறப்பை அடைந்தான். ராஜதர்மாவென்னும் பக்ஷியானது ப்ரஹ்ம குலத்தை அடைந்தது.

நன்றி கொன்றவனுக்கு ப்ராயச்சித்தமில்லை. நன்றி கெட்டவனுக்கு யஶஸ்ஸும் இல்லை, ஸ்தானமில்லை, ஸுகமில்லை. நன்றியுள்ளவனாகவும் மித்ர த்ரோஹம் செய்யாதவனாகவும் இருக்கவேண்டும். மித்ரன் சிறந்த பாக்யம் என்று கூறப்படுகிறான். தன லாபத்தைக் காட்டிலும் மித்ர லாபம் உயர்ந்ததாகும். நன்றி கெட்ட பாபியையும் மித்ர த்ரோஹஞ் செய்தவனையும் குலத்திலிருந்தே விலக்க வேண்டும்.

(ஸ்ரீ மஹா பாரதம் - சாந்தி பர்வா)

---

*நிறை குடம் நீர் ததும்பி ஒலிப்பதில்லை. அது போல், கடவுளை அறிந்தவன் அதிகம் பேசுவதில்லை. ஆனால், நாரதர் போன்ற மகான்களுடைய விஷயம் என்ன? நாரதர், ஶுகதேவர் போன்ற சிலர், ஸமாதி நிலையை அடைந்த பிறகு அநேகம் படிகள் கீழே இறங்கி வந்தனர். ஜன சமூகத்தினரிடம் அவர்களுக்கு இருந்த க்ருபையாலும் அன்பினாலும் அவர்கள் உபதேசம் செய்ய வந்தனர்.*

**- பகவான் ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர்**

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும்-8

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
A. சுந்தரேச ஸர்மா வாஜபேயயாஜீ

## மகம்

நக்ஷத்ரங்களில், மக நக்ஷத்ரத்தை ஐந்து மஹா நக்ஷத்ரங்களில் ஒன்று என வர்ணிக்கப்படுகிறது. மக நக்ஷத்ர ஜாதகத்தை எந்த ஜாதகத்துடனும் சேர்க்கலாம் என தைவக்ஞர்கள் கூறுவார்கள். ''மகத் தாழ்வான் ஜகத்தினை ஆள்வான்'' என்று ஒரு பழமொழி உண்டு. இந்த மக நக்ஷத்ரம் ஆகாயத்தில் இரண்டு கட்டில் கால்களின் உருவத்தினை உடையதாக அடையாளம் காட்டப்படுகிறது. வைகாசி மாதம் 11-ந் தேதி முதல் வைகாசி 23-ந் தேதி முடிய, மாலை 6 மணி சுமாருக்கு இதனை காண முடியும் என வான ஸாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள்.

மக நக்ஷத்திரத்திற்கு பித்ருக்கள் தேவதை. பித்ருக்களின் ஸ்வரூபம். கைகளில் பிண்டங்களை வைத்துக் கொண்டுள்ளார்கள். மிகவும் இளைத்தவர்கள். தூமத்தின் நிறத்தை உடையவர்கள். மிகவும் சுத்தாத்மர்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் பித்ருக்களுடைய அனுக்ரஹம் இருந்துவிட்டால் சாதிக்க முடியாததே கிடையாது. ஒருவனுக்கு மக நக்ஷத்ரக்காரன் மித்ரனாக இருப்பின், அவன் பல சாதிக்க முடியாத காரியங்களையும் சாதித்து விடமுடியும்.

மக நக்ஷத்ரக்காரர்களுக்கு அதிகமான வேலையாட்கள் இருப்பார்கள். எப்பொழுதும் தன்னுடன் பலர் இருப்பதை மிகவும் விரும்புவார்கள். நிறைய ஐச்வர்யத்தை நிர்வஹிப்பார்கள். தனக்கு தேவையானவற்றை, எதையும் குறைத்துக் கொள்ள விரும்ப மாட்டார்கள். தேவ கார்யங்களிலும் பித்ரு கார்யங்களிலும் மிகவும் பக்தியுடையவர்களாகவும் இருப்பார்கள். எந்த விஷயத்திலும் மிகவும் உத்ஸாஹத்துடன் ஈடுபடுவார்கள். எந்த வேலையையும், பொறுப்புகளையும், இவர்கள் சாமர்த்தியத்துடன் நிறைவேற்றும் திறமை படைத்தவர்கள்.

தனது அபிப்பிராயத்தை நிறைவேற்றாதவர் விஷயத்தில் மிகவும் கோபம் அடைந்து விடுவார்கள். சிறிது கடுமைத் தன்மையும் இவர்களுடன் உடன் பிறந்தது. சிலருக்கு முகவாய் கட்டை பெருத்திருக்கும். அகண்ட முகம், சிவந்த கண் உடையவர்களாக இருப்பார்கள். விஷய ஸுகங்களில் ஈடுபாடு அதிகம் இல்லாதவர்கள். பயனற்ற விஷயத்தில் கோபத்தைக் காட்டும் ஸ்வபாவம் இவர்களிடம் உண்டு. எப்பொழுதும் ஏதோ ஒரு விஷயத்தில் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஈகையில் (தான தர்மங்களில்) மிகவும் உதாரமான ஸ்வபாவம் கொண்டவர்கள். இதனால் இவர்களுக்கு எப்பொழுதும் தெய்வம் துணை இருக்கும். கேதுவின் நக்ஷத்ரம் ஆனதால் அறிவு மிக்கவர்களாக இருப்பார்கள். எந்த கல்வியையும் கற்கும் திறமை இவர்களுக்கு உண்டு. மஹா கணபதியை இவர்கள் உபாஸிப்பதால் மிகவும் நன்மை ஏற்படும்.

மக நக்ஷத்ர யாகத்தின் ப்ரதான மந்த்ரத்தில், ''மனோ வேகம் போன்ற வேகம் படைத்த பித்ருக்கள் இந்த யாகத்திற்கு வந்து ஹவிர்பாகங்களைப் பெற்றுக் கொள்ளட்டும். அக்னி ஸம்ஸ்காரம் பெற்றவர்கள், அக்னி ஸம்ஸ்காரம் பெறாதவர்கள், பித்ரு லோகத்தில் உள்ளவர்கள் எனக்குத் தெரிந்த, தெரியாத பித்ருக்கள் என யாவரும் வந்து யக்ஞத்தால் திருப்தியடையட்டும்'' என உயர்வாக ப்ரார்த்திக்கப்படுகிறது. □

---

இவ்வுலகத்தில் பரிபூர்ணமடைந்தவர்கள் இரு வகையினர் ஆவர். உண்மையை அறிந்து, பின், பிறரைப் பற்றியே சிந்தனையே இல்லாமல், தாம் மட்டும் அவ்வுண்மையை அனுபவித்துக் கொண்டு மௌனமாக இருப்பவர் ஒரு வகையினர். பெற்ற உண்மையைத் தாம் மட்டும் அனுபவித்து சந்தோஷம் அடையாமல் ''எம்மோடு உண்மையை அனுபவிக்க வாருங்கள்'' என்று, மற்றவர்களையும் உச்ச ஸ்வரத்தில் கூற அழைக்கும் சுபாவமுடையவர்கள் மற்றொரு வகையினர்.

- பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி

*கேள்வி : சிலர், அலுவல் விஷயமாக வெளியூர்களுக்கு செல்லும் பொழுது புனித தீர்த்தங்களில் ஸ்நானம் செய்கிறார்கள். மஹா க்ஷேத்ரங்களை தரிசனம் செய்கிறார்கள். இவர்களுக்கு அதற்கான புண்ணியம் கிடைக்குமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : தீர்த்த யாத்ரைகளோ, க்ஷேத்ராடனங்களோ நாம் எவ்வளவுக் கெவ்வளவு சிரத்தையுடனும், ஆசையுடனும் செய்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு பலன் அதிகம் கிடைக்கும். ஆனாலும், யத்ருச்சையாகவோ வேறு அலுவலை சம்பந்தப்படுத்தியோ செல்லும் காலத்திலும் சிறிதளவாவது புண்யம் கிடைக்கவே செய்யும்.

*கேள்வி : என்னுடைய நண்பர் ஒரு குருவை ஆச்ரயித்துள்ளார். அந்த குரு நான் என்ன செய்கிறேன் என்று பார்க்காதே, நான் சொல்வதை கேள் என்கிறார். இது சரியா?*

பதில் : மஹாத்மாக்களை ஒருகாலும் புத்தியினால் புரிந்து கொள்ள முடியாது. நாம் ஒருவரை குரு என்று ஆச்ரயித்துவிட்டோமானால் அவருக்கு முழுமையாக கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மஹாத்மாக்கள் எந்த ஒரு தர்மத்திற்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவச்யம் இல்லை. எனினும் பல மஹாத்மாக்கள் தாங்கள் போதித்த மார்க்கத்தில் நின்று காண்பித்துள்ளார்கள்.

*கேள்வி : உலகத்தில் நடக்கும் தீமைகளுக்கும் கடவுளே காரணமா? அவ்வாறாயின் கடவுள் இவ்வாறு செய்வானேன்?*

பதில் : நன்மைகளோ, தீமைகளோ, தர்மமோ, அதர்மமோ உலகத்தில் எந்த ஒரு கார்யமும் இறைவனுக்கு தெரிந்தே நடக்கிறது. உலகத்தில் நம்முடைய சிற்றறிவைக் கொண்டு சிலவற்றை தீமை என்றும் சிலவற்றை நன்மையென்றும் தீர்மானிக்கிறோம். இன்றைக்கு நன்மையாக தெரிவது நாளை தீமையாக மாறலாம். இன்று தீமையாக தெரிவது நாளை நன்மையாக மாறலாம். கடவுளின் செயல்பாடுகளை ஒரு நாளும் நம் சிற்றறிவைக் கொண்டு ஆழம் காண முடியாது. நாம் நன்மை, தீமை என்று முடிவு செய்வதெல்லாம் நம்முடைய சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டே ஆகும்.

*கேள்வி : குருவையே தெய்வமாக உபாஸிக்க வேண்டுமா?*

பதில் : குரு, பகவான், ஆத்மா இம்மூன்றும் ஒன்றே. உண்மையில் இவை மூன்றுக்கும் வித்யாஸமே இல்லை.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரிடம் ஒரு மாது தனக்கு ஒரு பேத்தி பிறந்திருக்கிறாள் என்றும், தன்னுடைய மனது பாசத்தினால் அவளிடமே ஈடுபடுகின்றது என்றும், தன்னால் முன்பு போல் இறைவனை நினைக்க முடியவில்லை என்றும் கூறி வருத்தப்பட்டாள். அதற்கு பரமஹம்ஸர் அந்த அம்மையாரிடம், கவலைப்படாதே! உன்னுடைய பேத்தியை குளிக்கச் செய்யும்பொழுதும், அலங்கரிக்கும் பொழுதும் உணவு கொடுக்கும் பொழுதும் ஸாக்ஷாத் ராதாராணிக்கு செய்வதாக நினைத்துக் கொள். உனக்கு விரைவில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும் என்று கூறினார். அதுபோலவே அவளும் செய்து வர, விரைவில் ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. இப்படியிருக்கும்போது நாம் தெய்வீக சக்தி முழுவதும் வெளிப்படும் குருவை, பகவானாக நினைத்து வழிபடுவது நன்மையே. மிக விரைவில், இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

*கேள்வி : பயணம் செய்யும்போதும், நடக்கும்போதும், எப்போதும் பகவன் நாமாவை ஜபம் செய்யலாமா?*

பதில் : பகவன் நாம ஜபம் செய்யலாம். பீஜாக்ஷரங்களோடு கூடிய மந்த்ரங்களையும், மற்ற சில விசேஷமான மந்த்ரங்களையும் அதற்குண்டான நியமங்களுடன்தான் செய்யவேண்டும்.

---

ஶோகோ நாஶயதே தைர்யம்
ஶோகோ நாஶயதே ஶ்ருதம் ।
ஶோகோ நாஶயதே ஸர்வம்
நாஸ்தி ஶோக ஸமோ ரிபு: ॥

- ஸ்ரீமத் ராமாயணம், அயோத்யா காண்டம்,
62-ம் ஸர்க்கம், 19வது ஸ்லோகம்.

மன வேதனையானது தைர்யத்தை அழித்து விடுகிறது. அறிவை அழித்து விடுகிறது. மன வேதனை எல்லாவற்றையும் அழிக்கிறது. மன வேதனைக்கு நிகரான பகை ஒன்றுமில்லை.

# வேத கதைகள் - 9

- தர்மக்ஞர், வான்முக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள்

## ஏழுமலை

ஸ்வர்க்க லோகத்தில் உள்ள யக்ஞ புருஷன், மறைவதற்காக விஷ்ணுவாக ஆகி விஷ்ணுவினுடைய உருவத்தையும் முழுமையாக எடுத்து தேவர்களிடமிருந்து ஓடி பூமியை அடைந்தார். தேவர்களும் பின் பக்கமாகவே வந்து கைகளை நீட்டி அவரை தாங்குவதற்கு விரும்பினர். இந்த யக்ஞ புருஷன் எங்கெங்கு செல்கிறாரோ அங்கு இந்திரன் அவரை மீறி முன்னால் வந்து அவர் வழியை தடுத்து நின்றான். எவன் என்னை தடுக்கிறான் என்று யக்ஞ புருஷனால் கேட்கப்பட்ட இந்திரன், யாராலும் அடைய முடியாத கோட்டைக்குச் சென்று எதிரியை வீழ்த்துவேன் என்று பதில் கூறினான். இவ்விதம் பெருமை வாய்ந்த என் சக்தியை பரீக்ஷை செய்கிற நீ யார் என்று இந்திரன், யக்ஞ புருஷனை வினவினான். யக்ஞ புருஷனும், யாராலும் அடையமுடியாத கோட்டையிலிருந்து எதிரியை மீட்டு வருவேன் என்று தன் சக்தியை ப்ரதிக்ஞை செய்தார். இவ்விதம் கூறி தன்னுடைய வ்ருத்தாந்தத்தை இந்திரனிடம் கூறினார்.

முன்பு ஒரு சமயம், அஸுரர்களின் வலிமையைக் கண்டு நான்கு தீக்ஷைகள், மூன்று உபஸத்துக்கள், ஒரு ஸுத்யை என்று எட்டு நாட்கள் செய்யக்கூடிய கர்மாக்கள், எனக்கு அங்கமாக உள்ளவர்கள், எல்லோரும் ஸ்வர்க்க லோகத்தில் வஸிக்கிற என்னிடமிருந்து பூமியை அடைந்தனர். அதில் நான்கு தீக்ஷைகள், மூன்று உபஸத்துக்கள் இந்த ஏழும் பூமியை அடைந்து ஏழுமலைகளாக தோன்றின. ஸுத்யாபிமானியான ஒரு தேவன் யாராலும் விரும்பத் தகுந்த ஸோம யாகத்தின் க்ரஹம், சமஸம் முதலியதான தேவர்களின் செல்வத்தை கவர்ந்தான். இதனால் அவனுக்கு வாமமோஷன் என்று பெயர் ஏற்பட்டது. தீக்ஷை என்பது வபனம், ஸ்நாநம், போஜநம், வெண்ணை பூசிக் கொள்வது, கண்ணுக்கு மை இட்டுக் கொள்வது முதலிய நியமங்களாகும். இவைகளை, நான்கு நாட்கள் அனுஷ்டிக்க வேண்டும்.


பசி, தாகம், பாபங்கள், இவைகளை போக்கடிப்பதற்காக செய்யக்கூடிய காரியங்களுக்கு உபஸத்துக்கள் என்று பெயர். இவைகளை மூன்று நாள் செய்யவேண்டும். ப்ராதஸ்ஸ்வநம், மாத்யந்தினஸ்ஸவநம், த்ருதியஸ்ஸவனம் என்று மூன்று வேளைகளில்,

ஸோமலதை என்ற கொடியை பிழிந்து ஹோமம் செய்வது, ஸோம பானம் செய்வது முதலிய காரியங்கள் செய்யப்படுவதற்கு ஸுத்யை எனப்பெயர். இது ஒரே நாளில் செய்யப்படுகிறது. இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதை உண்டு. இவைகள் யக்ஞ புருஷனுக்கு கை, கால் முதலிய அங்கம் போன்றவர்கள்.

தற்சமயம், தீக்ஷை ஒருநாள், உபஸத்துக்கள் மூன்று நாள், ஸுத்யை ஒரு நாள் என்று ஐந்து நாட்களுக்குள் யாகம் முடிக்கப்படுகிறது. ஸுத்யாபிமானி தேவன் தன்னால் திருடப்பட்ட க்ரஹம், சமஸம் முதலிய எல்லா பொருள்களையும் அஸுரர்களுக்கு அளித்து தான் வராஹ அவதாரம் எடுத்து இந்த ஏழுமலைக்கு அப்பால் சென்று அந்தச் செல்வத்தை பாதுகாத்தார். அந்தச் செல்வத்தை அடைந்தால்தான் தேவர்களுக்கு பெருமை கிடைக்கும். ஆகையால், "ஹே இந்திரனே! கோட்டையில் உள்ள விரோதியைக் கொல்லும் சக்தி உனக்கு இருக்குமாகில், நீ ஏழுமலைக்கு அப்பால் சென்று, அங்கு ஒளிந்து கொண்டு இருக்கிற விரோதியைக் கொல்வாயாக" என்ற விருந்தாந்தத்தை யக்ஞ புருஷன் இந்திரனிடம் கூறினார். உடன் இந்திரன், ஒரு தர்ப்பத்தாலேயே ஏழுமலைகளையும் பிளந்து பன்றியை அழித்தான்.

பிறகு இந்திரன் யக்ஞ புருஷனை பின் வருமாறு கூறினான். கோட்டையில் ஒளிந்து இருக்கும் விரோதியை மீட்டு வருவேன் என்று என்னிடத்தில் ப்ரதிக்ஞை செய்தாய். அந்த சக்தி உனக்கு இருக்குமாகில் இந்த விரோதியான வராஹத்தை நீ அழைத்து வா, என்று இந்திரனால் கூறப்பட்ட யக்ஞ புருஷன், வேதி, க்ரஹம், சமஸம் முதலிய செல்வத்தோடு கூடின வராஹ உருவமெடுத்த யக்ஞத்தை எடுத்து வந்து தேவர்களுக்கு அளித்தார்.

தற்சமயம், திருப்பதியில் ஏழுமலைகள் இருக்கின்றன. ஆதலால் தான் அங்கு உள்ள பெருமாளை ஏழுமலையான் என்று அழைக்கிறோம். திருப்பதியில் ஸ்வாமி புஷ்கரிணி எனப்படும் குளத்தின் வட மேற்கு மூலையில் வராஹ ஸ்வாமி விளங்குகிறார். அவரை முதலில் தரிசனம் செய்து விட்டுத்தான் ஸ்ரீநிவாஸனை தரிசனம் செய்யவேண்டும். மேற்கூறிய கதையிலும் ஏழுமலைகள், வராஹத்தின் வ்ருத்தாந்தம் கூறப்பட்டுள்ளன. யக்ஞ புருஷனும் விஷ்ணு உருவமெடுத்து தேவர்களிடமிருந்து ஓடி ஒளிந்து இங்கு வந்தார் என்று கூறப்பட்டுள்ளது. புராணத்திலும் பகவான் விஷ்ணு, வைகுண்டத்திலிருந்து வெறுப்பு அடைந்தவராக இங்கு வந்து யாரும் அறியாமல் இருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இவைகளை நன்கு பரிசீலனை செய்யும் பொழுது, ஓடி வந்த யக்ஞ புருஷன்தான் ஸ்ரீ வேங்கடேசன். நான்கு தீக்ஷைகள்,



மூன்று உபஸத்துக்கள் இவைகள் தான் ஏழுமலைகள். வேதி க்ரஹம், சமஸம் இவைகளை அங்கமாக உள்ள ஸுத்யா தேவன் தான் வராஹம். அவர் இந்த குளத்தங்கரையில் விளங்குகிறார். பாகவதத்திலும் ஹிரண்யாக்ஷனை வதம் செய்த வராஹ மூர்த்தி, ஸ்ருக்கு, ஸ்ருவம் இவைகளை அங்கமாக உள்ளவர். ஆதலால் தான், 'யக்ஞ வராஹர்' என அழைக்கப்படுகிறார். வேங்கடேச அஷ்டோத்ரத்திலும் 'யக்ஞ வராஹாய நம:' என்று ஒரு நாமா கூறப்பட்டுள்ளது. இவ்விதம் யாவற்றையும் நன்கு ஆராய்ந்து கவனித்தால் திருப்பதி க்ஷேத்திரத்தின் வரலாறு இந்த வேதக் கதையை அடிப்படையாக கொண்டது என்ற உண்மை நமக்கு நன்கு விளங்குகிறது.

(இந்த கதை, ஸ்ரீ க்ருஷ்ண யஜுர் வேத ஸம்ஹிதை, 6-வது காண்டம் 2-வது ப்ரபாடகத்தில் இருக்கிறது.)

---

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது. இந்த நாம ஸங்கீர்த்தனத்தில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*

*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்திரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள், மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச் செலவோ கிடையாது. இதில், ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்னைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை இது விஷயமாக தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

# நாரத பக்தி ஸூத்ரம் - 1

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஸாஸ்த்ரிகள்

## ஸூத்ரகாரர் நாரதர்

ஶ்ரிய: பதியான ஸ்ரீமன் நாராயணன், ஞான கலாவதாரமாய் பராசர முனிவரின் புத்ரனாக அவதரித்து, க்ருஷ்ண த்வைபாயனர் எனக் கொண்டாடப்பட்டார். ஒன்றாக இருந்த வேதத்தை ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவாகப் பிரித்து பைலர், வைசம்பாயனர், ஜைமினி, ஸுமந்து என்கிற தனது சீடர்களுக்கு முறையே அனுக்கிரஹித்து வேத வ்யாஸர் என்று ப்ரஸித்தி பெற்றார். வேதங்களின் தலையான உபநிஷதங்களின் கருத்துக்களை ப்ரும்ம ஸூத்ரங்களாய் தொகுத்துக் கொடுத்தார். ஜீவன்கள் அனைவருடைய நலனில் அக்கறைக் கொண்டு ஐந்தாவது வேதமாகிய மகாபாரத இதிஹாஸத்தையும், விஷ்ணு புராணம் முதலான பதினெட்டு புராணங்களையும் வெளியிட்டார். இவ்வாறு தனது ஒவ்வொரு செயலும் உலக மக்களின் நன்மைக்காகவே என்று இருந்து வரும் வியாஸ மாமுனிவர், இந்த அனைத்து ஸாஸ்திரங்களுடைய வற்றின் ஸாரம் பகவத் பக்தியே என்று, தானே அறுதியிட்டுக் கூறுகிறார்.

*"ஆலோட்ய ஸர்வ ஸாஸ்த்ராணி விசார்யச புன: புன: ।*
*இதமேகம் ஸுநிஷ்பன்னம் த்யேயோ நாராயண: ஸதா ॥"*

"அனைத்து ஸாஸ்திரங்களையும், அதனில் புகுந்து மறுபடியும் மறுபடியும் ஆராய்ந்து தீர்மானம் செய்த ஒரே ஸாரம் ஸ்ரீ நாராயண த்யானமே"

உலக நினைவுகளை மறந்து எப்பொழுதும் பகவத் த்யானத்தில் இருப்பது தானே பக்தி. பகவானிடமே நம் மனம் குடிகொண்டு எண்ண அலைகள் அவனையே சுற்றி இருப்பது தான் பக்தியின் யதார்த்த நிலை. எந்த காலத்திலும், எந்த இடத்திலும், எந்த நிலையிலும் பக்தி ஒன்றே ஸாரமானது என்று இருந்தாலும், விசேஷித்து கலியுகத்தில் ப்ரதான தர்மமாய் பக்தி விளங்குகிறது. பாத்ம புராணத்தில், வியாஸ மாமுனிவரே, "கலௌ பக்தி: கலௌ பக்தி: பக்த்யா க்ருஷ்ண: புர: ஸ்தித:" என்கிறார். "கலியுகத்தில் பக்தி ஒன்று தான் ஸாதனம். கலியில் பக்தி ஒன்றுதான் ஸாதனம். பக்தியால்தான் ஸ்ரீ க்ருஷ்ணன் நம்முன் வருவான்" என்கிறார்.

தோஷங்களுக்கெல்லாம் இருப்பிடமான காலத்தின் தன்மையையும், எந்த ஒரு தர்மத்தையும் சரிவர அனுஷ்டிக்க இயலாத ஜீவனின் அவல நிலையையும், பக்தியின் ஸௌலப்யத்தையும் நினைத்துப் பார்த்தே கலியுகத்தின் விசேஷ தர்மமாய் பக்தியைக் காட்டிக் கொடுக்கிறார்.

தவம், யோகம், த்யானம், யாகம், அத்யாத்மவிசாரம் முதலிய அனைத்து ஸாதனைகளும் கலியில் க்ஷீணித்து வருகின்றன. அதர்மத்தில் ருசியை ஏற்படுத்தும் கலியால், எந்த ஒரு தர்மத்தையும் சரியான முறையில் அனுஷ்டிக்க இயலாதவனாக ஆகிவிட்டான் ஜீவன். காமமும், கோபமும், பேராசையும், பொறாமையும் ஆட்டிவைக்கும் மனதை அடக்கி ஒருமுகப்படுத்தி தவத்தில் ஈடுபடுத்தமுடியவில்லை. சில நிமிஷங்கள் கூட மனதை தன் கட்டுப்பாட்டில் வைக்க இயலாமல் மனம் போனபடியெல்லாம் நடப்பவனால் யோக ஸாதனைகளைப் பின்பற்ற முடிவதில்லை. நாக்குக்கும், சரீரத்திற்கும் அடிமையாக ஆகிவிட்ட படியால் எந்த ஒரு விரதத்தையும் அனுஷ்டிக்க முடிவதில்லை.

ஸந்த்யா வந்தனம், ஔபாஸனம் கூட ஸாஸ்த்ரோக்தமாய் செய்ய முடியாதவனுக்கு ச்ரௌத கர்மாக்களில் தகுதி இல்லாமல் போய்விட்டது. ஆசாரக் குறைவாலும், ஸ்ரத்தையின்மையாலும் பணத்தில் ஏற்பட்ட பேராசையாலும் ஸ்மார்த்த, வைதிக கர்மாக்களும் முறைப்படி நடப்பதில்லை. மகா பாபிகளின் தொடர்பாலும், வியாபார நோக்கம் கொண்டவர்களாலும் தீர்த்தங்களுடையவும், க்ஷேத்திரங்களுடையவும் மகிமை ஒளிந்து கொண்டன. விவேகம், வைராக்யம் முதலிய அடிப்படை தகுதியே இல்லாத நிலையில் அத்யாத்ம விசாரத்திலும் ஈடுபாடு ஏற்படவில்லை.

வர்ண தர்மங்களும் ஆச்ரம தர்மங்களும் இருக்கும் இடம் தெரியவில்லை. பொது தர்மங்களான ஸத்யம், தயை, பரோபகாரம், அன்பு முதலிய நற்பண்புகளும் இருக்கும் இடம் தெரியவில்லை. இவ்வாறு காலத்தின் தன்மையால் அவல நிலை அடைந்திருக்கும் ஜீவனுக்கு ''நான் இருக்கிறேன்'' என்ற அபயம் கொடுத்து தூக்கிவிடக் கூடிய ஒரே வழி பக்தி ஒன்றே.

அத்தகைய பக்தியின் ஸ்வரூபத்தையும், உட்பிரிவுகளையும், பக்தனுடைய லக்ஷணங்களையும் யார்தான் விவரிக்க இயலும்.

இதையே ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்,

*"பத்ரம் க்ருத்வாச தரணீம் மேரும் க்ருத்வாச லேகனீம் ।*
*மாஹாத்ம்யம் பக்தியோகஸ்ய தைவேனாபி ந லிக்யதே ॥*

என்கிறார்.

பூமியையே ஓலையாகக் கொண்டு, மேரு மலையை எழுது கோலாகக் கொண்டு பகவானே பக்தி யோகத்தின் மகிமையை எழுத அமர்ந்தாலும், பகவானாலும் முடியாது போகும் என்று எனது குருநாதர் ஸத்குரு ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் ஸ்ரீ ப்ருந்தாவன மாஹாத்மியத்தில் வர்ணிக்கிறார். அத்தகைய துருகமான விஷயமானாலும் நாரத மாமுனிவரின் அடிபற்றி ஆத்ம த்ருப்திக்காக பக்தியின் விஷயங்களை ஆஸ்வாதனம் செய்ய புகுகின்றோம்.

பக்தியின் ஸ்வரூபத்தையும், வைலக்ஷண்யத்தையும், ரஹஸ்யத்தை யும், பக்தனுடைய லக்ஷணங்களையும் காட்டவே தேவ ரிஷியான நாரதர் பக்தி ஸூத்திரங்களை வெளியிட்டார். நாரதரைத் தவிர வேறு யார் தான் இதற்கு பொருத்தமானவர்?

தன் சரீர அழகில் கர்வம் கொண்டு, ப்ரஜாபதிகளை பரிஹஸித்து, அவர்களது சாபத்துக்கு உட்பட்ட உபபர்ஹணன் எனும் கந்தர்வன் தாஸீ புத்ரனாய் பிறந்தான். குழந்தைக்கு ஐந்து வயதிலேயே ஸத்ஸங்கம் கிடைத்தது. சாதுர்மாஸ்ய காலத்தில் ஸாதுக்களுக்கு கைங்கர்யம் செய்து அவர்கள் கருணைக்கு இலக்கானான். ஞானமும், வைராக்யமும் உள்ளத்தில் ஜ்வலித்தன. எம்பெருமானிடம் பேரன்பு கொண்டான். பெருமாள் கருணையும் கிட்டியது. பகவத் ஸாக்ஷாத்காரம் கிடைத்தது. ஜன்மம் முழுவதும் எம்பெருமானின் திரு நாமங்களையே பாடி, திரு உருவத்தையே உள்ளத்தில் கொண்டு, வேறு எதிலும் ஆசையற்றவனாய் இருந்து கடைசியில் சரீரத்தை உதறி ப்ரும்ம தேவனின் மானஸ புத்ரனாய் நாரதராய் தோன்றினார்.

அனைத்து ஸாஸ்திரங்களும் பயின்றும் ஆத்ம த்ருப்தி ஏற்படாமல் ஸனத்குமாரரை அண்டி ஆத்ம வித்யை உபதேசம் பெற்றார். ப்ரும்ம தேவனிடமிருந்தே பாகவத உபதேசம் பெற்று, ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல், உலகுடன் ஒட்டாமல் எப்பொழுதும் பகவானையே பாடித் திரிபவர். வால்மீகி முனிவருக்கு ஸம்க்ஷேபமாய் ராம குண சரித்திரங்களைச் சொல்லி ராமாயணம் வெளிவரச் செய்தவர்.

மனதில் குறை கொண்டு இருந்த வ்யாஸ மாமுனிவருக்கு குறை தீர பாகவத தர்மங்களை உபதேசித்து பாகவதம் ஆவிர்பவிக்கச் செய்தவர். துருவனும், ப்ரஹ்லாதனும் ஐந்து வயதிலேயே பகவானை நேரில் வரச் செய்யும்படியான பெருமைக்கு நாரதரின் அருளே காரணம். ப்ரசேதஸ்களையும், பர்ஹிஷத்தையும், தக்ஷ புத்ரர்களான ஹர்யச்வ சபலாச்வர்களையும் பாகவத தர்மம் உபதேசித்து ஆட் கொண்டவர். பகவானின் அவதார நாடகங்களில் மூலமாக இருக்கக்கூடியவர். பக்தி தேவியே தன் துயரம் நீங்க நாரதரை சரணமடைகிறாள். ''தேவர்ஷணீ நாரதோஹம்'' (தேவரிஷிகளுள் நான் நாரதன்) என்று கண்ணபிரானாலேயே தனது விபூதியாக பகவத் கீதையில் கொண்டாடப்படுபவர்.

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''*

என்ற ஷோடச நாம மந்திரத்தை கலியைக் கடக்கும் உபாயமாய் கலி ஸந்தாரண உபநிஷத்தில் காட்டி அருளியவர். ''ஸம்ஸார துயரங்களில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் ஜீவன்களுக்கு கரை சேர்க்கும் ஓடம் ஹரி நாமம்'' என்று உணர்த்தி அல்லும் பகலும் கையில் வீணையுடன் இனிமையாய் ஸங்கீர்த்தனம் செய்து கொண்டு தானும் ஆனந்தப்பட்டு மற்றவர்களையும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்பவர். நற்குணங்கள் யாவும் நிரம்பியவர். பரம ப்ரேம பக்தர். பக்திக்கு ஆசார்யர். ஹிரண்யன், கம்ஸன் போன்ற அரக்கர்களாலும் பூஜிக்கப்படுபவர். உலக நன்மைக்காக ஆகும் அவரது செயல் புரிந்து கொள்ளாமல் 'கலஹப்ரியர்'' என்று அறிவிலிகளால் அழைக்கப்பட்டாலும் கவலை கொள்ளாதவர். நாரதரின் பெருமை சொல்லி மாளாது.

இவ்வளவு பெருமை படைத்த நாரதர், கோரமான இக்கலியுகத்தில் அனைத்து ஜீவன்களும் அந்தக்கரண சுத்தி பெறவும், உத்தமமான ச்ரேயஸை அடையவும் பக்தி ஒன்றே கதி என்பதாலும், ஜீவன் அடையவேண்டிய லாபம் பக்தி ஒன்றே என்பதாலும், பரம கருணையால் பக்தி சாஸ்திரத்திற்கு ஸூத்திரங்களை அனுக்கிரஹித்துக் கொடுத்தார். நாரதரால் வெளியிடப்பட்டதாலேயே இதற்கு நாரத பக்தி ஸூத்ரம் என்று பெயர் ஏற்பட்டது. பக்தி விஷயங்களை தெரிந்து கொள்வதற்கு, அழகிய எளிய க்ரந்தமாக ப்ரகாசிக்கிறது.

**(தொடரும்)**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 4

ஒரு கிராமத்தில், கோபாலன் என்ற ஒரு பெரியவர் வாழ்ந்து வந்தார். நற்பண்புகள் நிறைந்த அவர், எல்லாராலும் போற்றப்பட்டார். அவருக்கு வெகுகாலமாக புத்ர பாக்யம் இல்லை. அதற்காக தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். அதன் பலனாக, வெகு காலம் கழித்து அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு ஹரி என்ற பெயரிட்டு செல்லமாக வளர்த்து வந்தார். அவன் செல்லமாக வளர்க்கப்பட்டதாலும், பல தீய நண்பர்களின் சகவாசத்தாலும் பல துஷ்ட செயல்கள் புரிந்து வரலானான்.

தந்தை எவ்வளவு எடுத்துச் சொல்லியும், அவன் திருந்தவில்லை. தன்னுடைய மகனின் நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார். ஹரி, பல தீய செயல்களில் ஈடுபட்டு ஊரார்களின் பழிக்கு பல சமயங்களில் ஆளாவான். அவனுடைய தந்தையிடம் ஊரார் கொண்டிருந்த மதிப்பினால், அவனுடைய துஷ்டச் செயல்களை ஊர்மக்கள் பொறுத்துக் கொண்டு வந்தனர். எனினும், அவன் செய்யும் பல அடாவடி செயல்களை அவன் தந்தையிடம் அவ்வப்பொழுது வந்து தெரிவிப்பார்கள். தந்தையும் மிகவும் வருந்தி தன்னுடைய மகன் மனம் திருந்த வேண்டி இறைவனிடம் ப்ரார்த்தித்து வந்தார்.

ஒரு நாள், அவருடைய வீட்டில் உள்ள மரக்கதவில் நிறைய ஆணிகள் அடிக்கப்பட்டிருந்ததைக் கண்ட ஹரி, தன் தந்தையிடம் அதற்கான காரணத்தை வினவினான். தந்தையோ, ''உன்னைப் பற்றி ஊரார் ஒவ்வொரு முறையும் புகார் சொல்லுகையில் நான் ஒவ்வொரு ஆணியாக அடித்து வந்தேன். அவைகள் தான் இவைகள்'' என்றார். அதைக் கெட்ட ஹரி, ''நாம் இத்தனை தீய செயல்களை செய்திருக்கிறோமா'' என்று மனம் வருந்தினான்.

தன் தந்தையிடம் தான் திருந்தி விட்டதாகவும், பல நல்ல செயல்களை இனி செய்யப் போவதாகவும் கூறினான். தந்தையோ ''கூறுவது எவர்க்கும் எளிது. நடைமுறையில் செய்வது அரிது'' என்று கூறினார். அவன், அன்று முதல் பல நல்ல காரியங்களை செய்ய ஆரம்பித்தான். ஊரார், அவன் செய்து வரும் நல்ல காரியங்களைப் பற்றி அவன் தந்தையிடம் அவ்வப்பொழுது தெரிவிக்கலாயினர். தந்தையும், ஒவ்வொரு முறை கேள்விப்படும் பொழுதும் ஒரு ஆணியை கதவிலிருந்து எடுக்கலானார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் கதவில் ஆணிகள் இல்லாததைக் கண்ட ஹரி, தன் தந்தையிடம் அதைப்பற்றி வினவினான். தந்தையும் ஆணிகளை எடுத்ததற்கான காரணத்தை விளக்கினார். ஹரியோ, ''ஆணிகளை எடுத்து விட்டாலும் அந்த இடங்கள் பள்ளங்களாக உள்ளனவே'' என்று கேட்டான். தந்தையும், ஆம், ''நீ இன்று எவ்வளவு நல்ல காரியங்களை செய்தாலும் முன்பு நீ செய்த தீய காரியங்கள் எல்லோர் மனதிலும் வடுக்கள் போன்று இருக்கவே செய்யும். அவைகளைத்தான் இந்த பள்ளங்கள் குறிக்கின்றன என்று கூறினார்.

ஆகவே, பாலகர்களே! நம் வாழ்க்கையில் எந்த தீய காரியங்களில் ஒரு விளையாட்டாகக் கூட ப்ரவேசித்தல் ஆகாது. பின்பு அதிலிருந்து மீண்டு வருவது என்பது மிகவும் சிரமம் ஆகும். நாம் குழந்தைகளாக இருக்கும் பொழுது பகவத் பக்தியையும் ஸத்ஸங்கத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவைகளால் மட்டுமே, நம்முடைய மனது தவறான காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியும்.

-ஸ்ரீ ஸ்வாமிகள்

---

தான் ஆசாரியனென்றும் தர்ம ஸ்தாபகனென்றும் நினைப்பவன் கனியாத அபிமானமுள்ளவன். ஆனால், ஈசுவரானுபவமடைந்து அதன் பின் அவன் அருளால் பிறருடைய நன்மைக்காக ஒருவன் உபதேசம் செய்யத் தொடங்கினால் பாதகமில்லை. பரீக்ஷித்து மகாராஜாவிற்கு பாகவதத்தை உபதேசிப்பதற்காக அவ்வித அனுக்கிரகத்தை ஶுகர் பெற்றிருந்தார்.

-பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர்

---

மிஷன் சார்பில் 'சாந்தீபனி குருகுலம்'' என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும், சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 30

*கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்*
*கூர்ந்தெனைச் சேர்ந்தருள் - அருணாசலா* - 20

அநேகமாக, பல வேதாந்த க்ரந்தங்களிலும் வேதாந்த பாடல்களிலும் ஸ்த்ரீகள் மேல் ஏற்படும் மோஹத்திற்கு ப்ராதான்யம் கொடுத்து அவைகளை நீக்க வேண்டும் என்றும், போக்க வேண்டும் என்றும் பகவானை ப்ரார்த்தித்துள்ளனர்.

கந்தரனுபூதியில், அருணகிரிநாதரும்,

*"கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே*
*சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ"*

*"வளைபட்ட கைம் மாதொடு மக்களெனுந்*
*தலைபட்டழியத் தகுமோ தகுமோ..."*

*என்றெல்லாம் பாடுகின்றார்.*

இதே அனுபூதியில், தனக்கு ஜீவன் முக்தி ஸித்தித்த நிலையை

*"தூசா மணியுந் துகிலும் புனைவாள்*
*நேசா முருகா நினதன்பருளால்*
*ஆசா நிகளந் துகளாயினபின்*
*பேசா அநுபூதி பிறந்ததுவே"*

என்ற பாடலால் அழகாக எடுத்துரைக்கிறார்.

அனுபூதியில் மற்றோரிடத்தில்,

*"கூகாவென என் கிளை கூடிஅழ*
*போகா வகை மெய்ப்பொருள் பேசியவா"*

என்கின்றார்.

"முருகா நீ என்னை இன்று தடுத்தாட் கொள்ளாவிடினும் பரவாயில்லை. என்னுடைய உயிர் பிரிந்தவுடன் என் உடலைக் கண்ட என் சொந்த பந்தங்கள் "கூகா' என்று கூச்சலிட்டு, அழுது, இடுகாட்டில் வைத்துச் சென்று விடுவார்கள்.

அப்பொழுது, என்னை எமதூதர்கள் வந்து அழைத்துச் செல்வதைத் தடுத்து, அந்நிலையிலாவது நீ வந்து என்னை தடுத்தாட் கொள்ளவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார். சொந்த பந்தங்கள் அலறும் நிலையை குறிப்பிடுகிலும் இவரது சிந்தை முழுவதும் குகனுடைய பக்தியே நிறைந்திருப்பதால் குகா என்பதே ''கூகா'' என்று வந்ததுபோலும்.

*''கார்மாமிசை காலன் வரிற் கலபத்*
*தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்''*

என்ற ஒரு பாடலில் ஒரு புறமாக, எருமை வாஹனத்தில் கருமை நிறமுடைய எம தர்மன், கையில் கோரமான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பாசக் கயிற்றுடன் வருகையில், நீ என் முன் தோன்றி, என்னை எம பாசத்திலிருந்து காத்து தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

இன்னுமொரு பாடலில்,

*''சாகாது எனையே சரணங்களிலே*
*காகாநமனார் கலகஞ் செயுநாள்..''*

என்கிறார்.

அதாவது, இதன் மூலமாக முருகபெருமானாரின திருவடிகளில் தன்னை இரண்டற சேர்த்துக் கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறார். *''சாகாது''* என்பது பிறப்பில்லாத அம்ருத்வத்தைக் குறிப்பதாகும். மற்றொரு பாடலில், ''உருவா யருவா யுளதா யிலதாய்...'' என்கிறார்.

இந்தப்பாடலில், இறைவன், உருவமாகவும் அருவமாகவும், இருளுக்கும் ஒளிக்கும் இடைப்பட்டு நிற்பதாகவும் கூறுகிறார்.

அதென்ன இருளுக்கும் ஒளிக்கும் இடைப்பட்டு நிற்பது என்றால், ''மயிலுக்கு வானமானது மேகங்களால் சூழப்பட்டு இருளாக இருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கும். அந்த நிலையில், அது தன்னுடைய தோகைகளை விரித்து மகிழ்ச்சியுடன் நடனமாடும். காலையில் இருள் விலகி பொழுது விடிவதைக் கண்டால் சேவலுக்கு மகிழ்ச்சி ஏற்படும். இந்நிலையில் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த கூக்குரல் இட்டு கூவும். முருகப் பெருமானும் சேவற் கொடியனாகவும், மயில் வாகனனாகவும் இருக்கின்றான்.''

இருளைக் கண்டு மகிழ்ச்சி அடையும் பக்ஷிக்கும், ஒளியைக் கண்டு மகிழ்ச்சி அடையும் பக்ஷிக்கும் இடைப்பட்டு அவன் நிற்பதையே இவ்வளவு அழகாக வர்ணிக்கின்றார்.

கீத கோவிந்தத்தில் ஸ்ரீ ஜயதேவரும், எப்படி ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா ராதையினுடைய சரணத்தை தன் சிரசில் ஆடுவதாக வர்ணிக்கின்றாரோ, அதைப் போலவே இந்த கந்தரனுபூதியிலும், வள்ளியினுடைய பதத்தை முருகப்பெருமான் வணங்குகின்றார் என்பதை

*"பணியாவென வள்ளி பதம் பணியுந்*
*தணியா அதி மோக தயாபரனே"*

என்று அழகாக வர்ணிக்கின்றார்.

அதாவது, வள்ளி என்பது பக்தியினுடைய தத்துவம். பகவானை யோகமோ, தவமோ, வேதாத்யயனமோ, வ்ரதமோ, பக்தி ஸந்தோஷப் படுத்துவது போல் ஸந்தோஷப்படுத்துவதில்லை என்பதையே பல மஹாத்மாக்களின் அனுபவங்களிலிருந்து நாம் அறிகின்றோம்.

அப்படிப்பட்ட தூய்மையான தியாகத்துடன் கூடிய பக்திக்கு பகவான் தன்னை இழந்து வசமாகிறான் என்பதையே அருணகிரிநாதரும் கூறுகின்றார்.

(தொடரும்)
**தொகுப்பு : முரளீதரதாஸன்**

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் *"அருணாசல அக்ஷர மணமாலை"* ஸ்ரீ குருஜியின் உபன்யாஸ கேசட்டுகள் - **மூன்றாம் பாகம்** - *(7 காஸெட்டுகள்) கிடைக்கும் இடங்கள் :*

1. **ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட்,**
20, அலமேலுமங்காபுரம்,
மைலாப்பூர்,
சென்னை - 600 004
Phone : 4935037

2. **ஸ்ரீ பாலகிருஷ்ணன்**
37/19, டி.எஸ். அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083
Phone : 4895529 PP

# நகர ஸங்கீர்த்தனம்

*"சாது சனத்தை நலியும், கஞ்சனை சாதிப்பதற்கு,*
*ஆதியஞ் சோதியுருவை, அங்குவைத்திங்குப் பிறந்த,*
*வேத முதல்வனைப் பாடி, வீதிகள் தோறும்துள் ளாதார்,*
*ஓதி யுணர்ந்தவர் முன்னா என்சவிப் பார்ம னிசரரே?"*


என்ற நம்மாழ்வாரது கர்ஜனைக்கேற்ப, ஸ்ரீ ஸ்வாமிகளின் மார்கழி மாத நகர ஸங்கீர்த்தனம் டிசம்பர் 28-ஆம் தேதி (மார்கழி மீ 13-ஆம் தேதி) வெகு குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்வாரஸ்யம் என்னவென்றால்...,"ஆழ்வாரின் முதலிரு வரிகள், க்ருஷ்ணன் சொன்ன *"பரித்ராணாய ஸாதூனாம்..."* என்ற கீதா வாக்கியத்தையே மொழிபெயர்த்தாற்போல் உள்ளது" என்று ஸ்ரீஸ்வாமிகள் கூறுவதுண்டு. ஆழ்வார் இப்பாசுரத்தில் பகவானை வேத முதல்வன் என்று அழைக்கிறார். நாம ஸங்கீர்த்தனம் செய்து வீதிகள் தோறும் துள்ள வேண்டும் என்கிறார்.

இதையே அக்ஷரத்திற்கு அக்ஷரம் செயல்படுத்த ஸ்ரீ ஸ்வாமிகள் திருவுள்ளம் கொண்டார் போலும்! ப்ரதி வருஷமும், கீதாச்சாரியனும், வேதவல்லி நாயகனும், அவதாரங்களிலேயே மிக ஸ்ரேஷ்டமானவனும், வீதி பஜனத்திற்கெனவே நாற்புறமும் அகலமான வீதிகள் கொண்ட திருவல்லிக்கேணி கோயிலில் எழுந்தருளியவருமான ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாளை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிகள் தநுர்மாத நகர ஸங்கீர்த்தனத்தை நடத்தி வருகிறார்கள்!

அன்று, அதிகாலை நான்கு மணியளவில் பக்த குழாம் புடைசூழ, ஸ்ரீ கல்யாணம் பாகவதரும் பங்கேற்க, ஸ்ரீ ஸ்வாமிகள், கோயிலின் முன் த்வாரத்தின் அருகில், மதுரமாக திருப்பாவை முப்பதும் செப்பினார். பிறகு, தோடய மங்களத்துடன் நகர ஸங்கீர்த்தனத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் ஆரம்பித்தார். ஸம்ப்ரதாயமாக குரு கீர்த்தனாதிகளை இனிதே பாடியபின், திவ்ய நாம கீர்த்தனங்களை, அதற்கு ஏற்ற நாமாவளிகளுடன் பாடி ஆனந்தித்தோம்.

"லுடா லுடா பண்டர புர" என்று, அவ்விடத்தை, மதுரமான, பரம பாவனமான பகவந் நாமாவளிகளாலும், அதற்கு தக்க துணையாய் அமைந்த ஜால்ரா, மிருதங்காதிகளின் இசையாலும், நிறைத்துவிட்டோம்!



வீதி பஜனையின் போது, அருகே உள்ள, நாம ப்ரியனான, நாம கீர்த்தன ஸபலனான, நாத ப்ரம்மமான ஸ்ரீ பாண்டுரங்கன் கோயில் கொண்ட, பஜனை மடத்தை நோக்கிச் சென்றோம். அவ்விடத்தை அடைவதற்கு சில வினாடிகள் முன், மின் துண்டிப்பால், வீதியே இருளில் மூழ்கியது. ஒளியின்மையை ஈடுசெய்ய எங்கள் நாம ஒலி இன்னமும் பலத்தது! சில வினாடிகளில் பாண்டுரங்கனின் கோயில் துவாரத்தை அடைந்தோம்...

நுழைந்த அந்த க்ஷணமே, ஸ்ரீ ஸ்வாமிகள் ''முகிம் மந்தஹாஸ'' என்று அபங்கத்தை எடுத்த அழகு, எங்கள் எல்லோரையும் புளகாங்கிதமடையச் செய்தது! ''பாண்டுரங்க யேரே...'' என்ற சரணத்தின் போது, விட்டலனும், தனக்கே உரிய கருணையால், தன் கண்ணாம்பூச்சி விளையாட்டைத் தவிர்த்து, மின் ஒளியால் கருவிருளை விரட்டினான்.

தொடர்ந்து, அரைமணி நேரளவு நடந்த அபங்க பஜனையை, வார்த்தையால் வர்ணிக்கவும் கூடுமோ? ஆனந்தம், ஆனந்தம், ஒரே ஆனந்தம்தான்! மனதே ஆகாமல், ஏக்கத்துடன் அவ்விடத்தை விட்டு நகர ஸங்கீர்த்தனத்தைத் தொடர்ந்தோம்.

பாடிக்கொண்டே, எங்கிருந்து ஸங்கீர்த்தனத்தைத் தொடங்கி னோமோ, அங்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஸ்ரீ ஸ்வாமிகள், பார்த்தசாரதி பெருமாளின் மேல் அருளிய ''வெங்கட க்ருஷ்ணம் உபாஸ்மஹே'' என்ற பாட்டை, ஸுஸ்வரத்துடன் தானே வருஷித்தார்.

பாட்டு முடிவதற்கும், *''கோயில் மணிக்கதவம் தாள்''* திறப்பதற்கும் சரியாக இருந்தது! பெருமாள், ஸ்ரீ ஸ்வாமிகள் அன்று செய்த நகர ஸங்கீர்த்தனத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று நாங்கள் பெருமிதம் கொண்டோம். மங்களம் பாடி நகர ஸங்கீர்த்தனத்தை பூர்த்தி செய்தோம்.

இப்பொழுதோ, அடுத்த தனுர்மாத நகர ஸங்கீர்த்தன பஜனத்தை ஆவலுடன் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

– ராமு

# செய்திகள்

### நவம்பர் 30-ந் தேதி

கார்த்திகை அமாவாஸ்யை ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் கங்காகர்ஷணம் முன்னிட்டு, சென்னை ப்ரேமிக பவனத்தில் அன்னதானம் நடைபெற்றது.

---

### டிசம்பர் 26-ந் தேதி

ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆராதனையை முன்னிட்டு, சென்னை ப்ரேமிக பவனத்தில், கிருத்திகா மண்டல பாராயணம், பன்னிரெண்டு வைதீகர்களை கொண்டு நடத்தப்பட்டது. ஸோமயாஜி ஸ்ரீ மல்லிகார்ஜுன சர்மா அவர்கள், ப்ரஹ்மசத்ரம் - அனசன பாராயணம் அனுஷ்டித்தார்கள். கருணானந்த மண்டலி ஸ்ரீ P.N. நாராயண சாஸ்திரிகள் அவர்கள் செய்துவரும் சேவையை பாராட்டி நமது மிஷன் சார்பில் அவர்களுக்கு 'ஸ்ரீ வித்யா தத்வ ரக்ஷாமணி' என்னும் விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

---

### ஜனவரி 5-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிக பவனத்தில், மணிமண்டபத்தில் அத்யயன உத்ஸவம் நடைபெற்றது. 14-1-98 அன்று மதியம் 3 மணி அளவில் ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது. இரவு வேத சாற்றுமுறையும் பகவானுக்கு கண்டருப்பட்டது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### பிப்ரவரி 25-ந் தேதி - மஹா சிவராத்திரி

வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்த்ராள் ஆராதனையை முன்னிட்டு ஐந்து கால அபிஷேகம் நடைபெறும்.

**மங்களானி பவந்து**


# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/98

| வேணு:3 | பிப்ரவரி 1998 | கானம்:7 |
|---|---|---|


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar